INVITATION



நாடார் மஹாஜன சங்கம்

சேர்மத்தாய் வாசன் மகளிர் கல்லூரி

அவனியாபுரம், மதுரை – 625 012.

தேசிய தர நிர்ணய மதிப்பீட்டில் "B" தகுதி பெற்றது.

✆ 72000 61388, 72000 51388

**தாய்த்தமிழ்க் கலை விழா 2024**

அன்புடையீர்,

வணக்கம்.

நிகழும் ஸ்ரீ குரோதி வருடம் ஆடித்திங்கள்
16 ஆம் நாள் (01-08-2024) வியாழக்கிழமை
காலை 10.00 மணியளவில்

**தாய்த்தமிழ்க் கலைவிழா**

எம் கல்லூரி வளாகத்தில் சிறப்பாக
நடைபெற இருக்கின்றது.

தாங்கள் விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்திட
அன்புடன் அழைக்கின்றோம்.

**கல்லூரி நிர்வாகக் குழு, முதல்வர்,**
**கல்லூரியின் தமிழ்த்துறை விரிவுரையாளர்கள்**
**மற்றும் மாணவியர்கள்**

AGANDA



**நிகழ்ச்சி நிரல்**

**தொடக்க விழா**

10.05 a.m. : தமிழ்த்தாய் வாழ்த்து

10.10 a.m. : திருவிளக்கேற்றுதல்

**வரவேற்புரை**

திருமதி. க. பாண்டிச்செல்வி M.A.,M.Phil.,B.Ed., D.G.T.,
தமிழ்த்துறைத் தலைவர்

**தலைமையுரை**

திரு. T.மோகன், கல்லூரித்தலைவர்

**முன்னிலை & வாழ்த்துரை**

திரு. M. ஜெயக்குமார் B.E.,
செயலாளர் & தாளாளர்
திரு. A.C.C. பாண்டியன், பொருளாளர்
திரு. T. குழந்தைவேல், துணைத்தலைவர்
திரு. T. ராமு, துணைத்தலைவர்
திரு. G. கணேசன், துணைத்தலைவர்
திரு. V.K.V. பாலகுரு, இணைச்செயலாளர்
முனைவர் G.மாரீஸ்குமார் M.A.,M.Phil.,M.T.M.,Ph.D.,
ஆலோசகர்
திரு. G. கரிக்கோல்ராஜ்
பொதுச்செயலாளர், நாடார் மஹாஜன சங்கம்
திருமதி. M. கவிதா M.Sc.,M.Phil.,B.Ed.,(Ph.D)
முதல்வர் (பொ)

**சிறப்பு விருந்தினர்** : முனைவர் **பா.சிங்காரவேலன்**
தமிழ்த்துறை இணைப் பேராசிரியர் &
தமிழ்த்துறைத்தலைவர்,
தமிழ் உயராய்வு மையம்,
அரசு கலைக்கல்லூரி, மேலூர்.

தலைப்பு : **"தமிழ் இலக்கியத்தில் பெண்கள்"**

11.30 a.m. : **போட்டிகள் துவக்கம்**

1.00 p.m. : **மதிய உணவு**

2.30 p.m. : **பரிசு வழங்குதல்**

நன்றியுரை : திருமதி. இரா. முத்துக்கனி M.A.,M.Phil.,CGT.,
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்

**நாட்டுப்பண்**

வாழ்க செந்தமிழ் ! வளர்க நற்றமிழ் !

PHOTOS






# REPORT

நாடார் மஹாஜன சங்கம்
சேர்மத்தாய் வாசன் மகளிர் கல்லூரி மதுரை.12.
தமிழ்த்துறை
"தாய்த்தமிழ்க்கலைவிழா- 2024"
அறிக்கை

நாடார் மஹாஜன சங்கம் சேர்மத்தாய் வாசன் மகளிர் கல்லூரியில் தமிழ்த்துறை சார்பாக,26-வது "தாய்த்தமிழ்க்கலைவிழா-2024" 01.08.2024 அன்று காலை 10 மணியளவில் கல்வித்தந்தை இராஜா கே.எஸ்.பி.கணேசன் கலையரங்கக் கூடத்தில் சீரும் சிறப்புமாக நடைபெற்றது. இவ்விழா தமிழ்த்தாய் வாழ்த்துடன் இனிதே தொடங்கியது. இந்நிகழ்ச்சியில் வரவேற்றல் எனும் தமிழனின் தகைசால் பண்பிற்கிணங்க தமிழ்த்துறைத் தலைவி திருமதி. க. பாண்டிச்செல்வி அவர்கள் வரவேற்புரை வழங்கினார். 'வாழ்த்துதல் சான்றோர்க்கு அணி' என்பதற்கிணங்க கல்லூரி துணைத்தலைவர் திரு T.குழந்தைவேல் அவர்கள், "நமது கல்லூரியின் மாண்புகளை பறைசாற்றும் உன்னத பெருவிழா தாய்த்தமிழ்க்கலைவிழா" என்று கூறி வாழ்த்தினார். கல்லூரி முதல்வர் திருமதி ஆ. கவிதா அவர்கள், 'தமிழரின் உள்ளத்து உணர்வுகளின் வெளிப்பாடே கலைகள். அத்தகைய கலைகளின் சங்கமமாகத் திகழும் தாய்த்தமிழ்க்கலைவிழா சிறக்க தனது வாழ்த்துக்களை வழங்கினார்.

இவ்விழா சிறக்க கல்லூரி தலைவர் T.மோகன், செயலாளர் திரு.M.ஜெயக்குமார், பொருளாளீர், திரு A.C.C.பாண்டியன் துணைத்தலைவர்கள் திரு T.இராமு. திரு.G.கணோன், இணைச்செயலாளர் திரு.V.K.V பாலகுரு, கல்லூரி ஆலோசகர் முனைவர்.G.மாரீஸ்குமார், மற்றும் நாடார மஹாஜன சங்க பொதுச்செயலாளர் திரு.G.கரிக்கோல்ராஜ் ஆகியோர் தங்கள் வாழ்த்துகளை தெரிவித்தனர்.

இந்நிகழ்சிசியில், மேலூர் அரசு கலைக்கல்லூரியின் தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் மற்றும் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் பா.சிங்காரவேலன் அவர்கள், “தமிழ் இலக்கியத்தில் பெண்கள்” எனும் தலைப்பில் திறமைகளின் மாண்புகள் நிறைந்த மணிமகுடங்கள் பெண்கள். அத்தகைய பெண்களின் சிறப்புகளை இலக்கியங்கள், சரித்திரம் படைத்த சாதனைப் பெண்களின் வாழ்வியல் வழியாக மாணவிகளுக்கு எடுத்துரைத்தார். மேலும் பெண்சக்தியே உலகின் பெரும் உந்து சக்தி. இச்சக்திகளால் தான் உலகம் நிலைபெற்று விளங்குகிறது. ஆகவே, மாணவிகள் ஒவ்வொருவரும் தங்களின் தலைமைப் பண்புகளை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று கூறி சிறப்புரையாற்றினார்.

சிறப்புற நடைபெற்ற தாய்த்தமிழ்க்கலைவிழாவில், பத்து கல்லூரிகளில் இருந்து பத்து பேராசிரிய பெருமக்களும் சுமார் ஆயிரம் மாணவிகளும் கலந்து கொண்டனர். இவ்விழாவில் பரதநாட்டியம், நாட்டுப்புற நடனம், ஆய்வுத்தாள் சமர்ப்பித்தல் ரங்கோலி, நிலைக்காட்சிப்படுத்துதல் போன்ற ஆறு போட்டிகளிலும் சிறப்பாக செயல்பட்டு முதலாம் பரிசை அய்ய நாடார் ஜானகியம்மாள் கல்லூரி மாணவிகள் பெற்றனர். இரண்டாம் பரிசினை ஸ்ரீ மீனாட்சி அரசு கலைக்கல்லூரி மாணவிகள் பெற்றனர். போட்டிகளில் பங்குபெற்ற அனைத்து மாணவிகளுக்கும் பங்கேற்பு சான்றிதழ் வழங்கப்பட்டது. விழாவின் நிறைவாக தமிழ்த்துறை உதவிப்பேராசியர் திருமதி.இரா.முத்துக்கனி அவர்கள் நன்றியுரை வழங்கினார். விழா நாட்டுப்பண்ணுடன் இனிதே நிறைவடைந்தது.

தமிழ்த்துறைத்தலைவர்
கையொப்பம்

முதல்வர்
கையொப்பம்